**மருத்துவக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: மரு.ரா.நாராயணபாபு, எம்.டி., டி.சி.எச்.,**

ந.க.எண்:81794/நி2/4/2021 நாள்:20.10.2022

பொருள் : நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.கோலா முரளி நாராயணா த/பெ.(லேட்) திரு.K.குருவய்யா, மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனை, சென்னை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை)எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை)எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை)எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
6. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
7. அரசு கடித எண்:8775/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
8. இவ்வியக்கக பணி ஒதுக்கீட்டு ஆணை ந.க.எண்:37662/நி2/4/2019, நாள்:25.10.2019.

11. இயக்குநர் மற்றும் கண்காணிப்பாளர், மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனை, சென்னை அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண்:5644/நி1/2018, நாள்:07.11.2019.
12. இயக்குநர் மற்றும் பேராசிரியர், மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்:5644/நி1/2019, நாள்:27.09.2021.

*****

Thirru Kola Murali Narayana 30/11/22



**ஆணை:**

சென்னை, மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனையில் மருத்துவமனை பணியாளராகப் (Hospital Worker) பணிபுரிந்து கொண்டிருந்த திரு.K.குருவய்யா அவர்கள் 08.11.2008 அன்று பணியில் இருக்கும்போது மரணமடைந்து விட்டார். அவரின் பிறந்த தேதி 31.12.1953 ஆகும். அவர் மருத்துவமனை பணியாளர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் நிறைவு பெற்றவராவார். மேலும், அவர் தொடர்ந்து பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.12.2013 ஆகும். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மகனும் வாரிசுதாரருமான திரு.கோலா முரளி நாராயணா அவர்கள் தனது 20.04.2009 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார்.

2) மனுதாரர் திரு.கோலா முரளி நாராயணா அவர்களின் பிறந்த தேதி 02.06.1978 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 - 71900/- நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, சென்னை, மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனையில் 07.11.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.கோலா முரளி நாராயணா என்பவரின் பணியினை, பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 07.11.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதல் ஆண்டுக்கான ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ரா.நாராயணபாபு
மருத்துவக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. திரு.கோலா முரளி நாராயணா,
இளநிலை உதவியார்,
மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும்
அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.

– உரிய வழியாக.

..3...

2. இயக்குநர் மற்றும் பேராசிரியர்,
   மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும்
   அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.

3. மாநில கணக்காயர், சென்னை -600 018.

4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8.

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.
உதிரி / இருப்பு கோப்பு.

// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //

மேலாளர்

Endt. no. 5866/E1/2022

R10 & GOH, Ch-8
Dt. 29.11.2022

Forwarded

Junior Administrative officer

29.11.22

To
Thiru. Kola Murali Narayana
Junior Assistant
R10 & GOH, Ch-8